# 20 பத்ததி முறையிலான பூசைகள்

எமது சமய வழிபாட்டு முறைகள் ஆகமம் சார்ந்தது, ஆகமம் சாராதது என இருவகைப்படும். இவற்றை விதிக்குட்பட்டது, விதிக்குட்படாதது என்றும் கூறலாம். விதிக்குட்பட்டது, சிற்பசாத்திர ஆகம விதிக்கேற்ப கிரியைகளை அடிப்படையாகக் கொண்டு பிராமணர்களால் பூசைகள் நடாத்தப்படுவதைக் குறிக்கும். விதிக்குட்படாதது என்னும்போது சடங்கை அடிப்படையாகக் கொண்டு கிராமியத் தெய்வங்களுக்கு பிராமணர்கள் அல்லாதவர்களால் நடத்தப்படும் வழிபாடாகும். இவ்விரண்டு வழிபாட்டு முறைகளில் ஆகம விதிகள் யாவும் பத்ததிகள் என்று சொல்லப்படும் விளக்க நூல்கள் மூலம் ஆற்றுப்படுத்துவதைக் குறிக்கும். இதே போல் ஆகம விதிக்குட்படாத, சடங்கை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறைகளும் பத்ததிகள் அல்லது பத்தாதிகள் என அழைக்கப்படுகின்றவற்றின் மூலம் கூறப்படுகின்றவாறு வழிபாடுகள் நிகழ்த்தப்படும். இவற்றுள் பின்னையது யந்திரத்தகடுகள் அல்லது ஏடுகளில் வழிபாட்டு முறைச் சடங்குகள் எழுதப்பட்டிருக்கும். அவை வசனமாகவோ அல்லது பாடலாகவோ அமைந்திருக்கும். இவற்றில் கூறப்பட்டபடியே சிறிதளவும் மாற்றம் செய்யாமல் விதிப்படி முறைப்படி சடங்கைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாதுவிடின் தான்தோன்றித்தனமாகச் செய்ய முற்படின் குறித்த தெய்வத்தால் பல தீங்குகள் நேரிடும் என்பது நம்பிக்கையாகும்.

இந்த விதிப்படிபூசைகள் கிராமிய தெய்வங்களுக்கு பூசாரிமார், கப்புகனார், கட்டாடிமார், ஆதிக் குடிகள், போன்றோரால் நிகழ்த்தப்படுகின்றன. இவை யாவும் பிரதேச ரீதியாகக் காணப்படும் பாரம்பரிய வழிபாட்டு முறைகளாகும். இவ்வாறான கிராமியத் தெய்வங்களை ஆற்றுப்படுத்துபவர்களின் குணவியல்புகளும் வேறுப்பட்டனவாகும்.

இலங்கையில் கிராமிய ஆண் தெய்வங்கள் என்ற வகையில் வீரபத்திரர், காத்தவராயன், சுடலைவயிரவர், ஐயனார், பெரியதம்பிரான், கல்லெறிமாடன், சுடலைமாடன், காளமாமுனி நாசிங்கர், பூதவராயர் விறுமர், வதனமார், அண்ணமார் போன்றவை சடங்கை அடிப்படையாகக் கொண்டு வழிபடுவதைப் போல முத்துமாரி, காளி, வராகி, விடாரி , கொத்தி நாச்சிமார், கடலாட்சி கண்ணகி, சீதை, திரௌபதி போன்ற பெண் தெய்வங்களும் சடங்கின் அடிப்படையிலே ஆற்றுப்படுத்தப்படுகின்றார்கள் பொதுவாக இத் தெய்வங்கள் யாவும் சடங்கின்போது வழிபடப்பட்டாலும் அவற்றுள் பிரதேச ரீதியாக மாறுபட்ட சடங்குகளும் இடம் பெறும். சில சடங்குச் சொற்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும். சில சடங்குகள் சில பிரதேசங்களில் வழக்கில் இல்லை. சில பிரதேசங்களில் அச்சொற்களே பிரதான சடங்குச் சொற்களாக அமையும்.

இங்கு பூசை முறைகள் என்ற வகையில் கும்பம் வைத்தல், கதவு திறத்தல், மண்டபம் காவல் பண்ணுதல், கலியாணச்சடங்கு, கும்பச்சடங்கு, சுவாமி ஊர்வலம், மடைபரவல், பரிகலம் அழைத்தல், குளிர்த்தி, தீமிதிப்பு, நேர்த்தி வேண்டுதல் வைரவர் சடங்கு என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவை பற்றி விரிவாகக் கற்கும் போது இவற்றுக்குள்ளே மேலும் உட்கிடக்கையான பூசைகளையும் இனங்கண்டு கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட பூசை முறைகளில் கும்பம் வைத்தல் என்பது குறிப்பிட்ட தெய்வத்தின் வாசல் முந்தலிலே பந்தலிட்டு சோடனை செய்தும் அத்தெய்வத்தோடு தொடர்புடைய பரிவாரத்தெய்வங்களுக்கும் பூரண கும்பம் நெற்குவியலில் நிலைநிறுத்தப்படும். இப்பூரணகும்பத்தில் குறிப்பிட்ட தெய்வத்தின் முகக்களை பொருத்தப்பட்டு அதற்குரிய பொருட்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். (உ+ம் முத்துமாரிக்கு வேப்பிலை கமுகம்பாளை) இக்கும்பம் நிலை நிறுத்தப்படும்போது குறிப்பிட்ட தெய்வத்தோடு தொடர்புடைய தேவாதிகளையும் மந்திரத்தால் உருவேற்றப்படும். (உ+ம் நரசிங்கருடன் தொடர்புடைய பெரிய தம்பிரான் காளாமுனி) இவ்வேளை பறைமேளச் சத்தம் வீரிட, பக்தி உணர்ச்சி பெருகிட, பக்தர்கள் தெய்வத்தின் பெயரைச் சொல்லிக் குரலிசைப்பர். இந்தக் கும்பம் வைத்தல் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களின் வழிபாட்டு முறையிலும் காணப்படுகின்றது. தெய்வத்தின் பூட்டப்பட்டிருக்கும் திருக்கதவினை ஊர் மக்கள் அனைவரும் அத் தெய்வத்துக்குரிய கதவு திறத்தல் பாடலைப்பாடி கதவைத் திறப்பர். அத்துடன் விளக்கும் ஏற்றுவர். இக்கதவு திறந்தவுடன் அவ்வூரில் அரிசி, அவல், போன்றவை இடித்தல், பொரியல், பலகாரம் சுடுதல் முதலானவற்றை குளுத்திப் பாடல் முடியும் வரை தவிர்த்து இருப்பர்.

கதவு திறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் இரவில் ஊருக்கு அசுத்தமானவர்கள் பூப்படைந்தோர், புலால் புசிப்பவர்கள் வெறியேற வேண்டும். இதனை ‘கூய்’ என சலவைத் தொழிலாளி அறிவிப்பார். இதன் மூலம் ஊர் சுத்தம் பெற்று புனிதம் அடைந்துவிடும். இதனை ஊர்காவல் பண்ணுதல் அல்லது மண்டம் காவல் பண்ணுதல் என்று அழைப்பர். கலியாணச் சடங்கு, கும்பச்சடங்கு என்னும் போது குறித்த தெய்வத்திற்கான முகபடம் வைத்து அதற்குரிய அழகு சம்பந்தமான பொருள்களை இட்டு வழிபடுவதைக் குறிப்பதாகும். பெரும்பாலும் இச்செயற்பாடுகள் எல்லாப் பிரதேசங்களிலும் இருப்பதாகக் கூறமுடியாது. தூளி பிடித்தல் என்னும் சடங்கு மிக முக்கியமானது. பொங்கல் பானைகள் (வளந்து) சிலவற்றை ஆற்றுப்படுத்துவோர் எடுத்துப் பறை ஒலிக்கேற்ப அவற்றை நான்கு திசைகளிலும் காண்பிப்பார். இந்நேரம் அவர் பொங்கல் அரிசியை ஆகாயம் நோக்கி வீசுவார். அதே நேரம் அவரில் கலையும் ஏற்படவாய்ப்புண்டு. பொங்கலுக்கு வேண்டிய மடைப்பொருள்களான வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் மரக்கறிகள், பலகாரங்கள் யாவும் உரிய முறைப்படி படைப்பதை மடைபரவுதல் எனக் கூறுவர் இவை உள்மடை, புறமடை என்ற வகையில் படைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். குறித்த தெய்வத்தைச் சூழ மேலும் சில தெய்வங்களை அயலில் வைத்து பூசை செய்வர். இவை சில வேளைகளில் பொங்கலைச் சிறந்த முறையில் நடத்தி முடிக்கத் தடையாக இருப்பதால்

அவற்றை அதற்குரிய மந்திரங்களால் ஆற்றுப்படுத்துவோரை வரவழைத்து சிறுபூசை செய்து கட்டுப்படுத்துவதை பரிகலம் அழைத்தல் (அடைத்தல்) என்று கூறுவர். சில கோயில்களில் தீக்குளித்தல் இடம்பெறும். இருப்பில் தீப்பள்ளம் ஒன்று தயார் நிலையில் இருக்கும். அதற்கான சடங்கு முடிவடைந்த பின் தீக்குளித்தல் அல்லது தீப்பள்ளம் ஏறுதல் இடம்பெறும். இந்த வழிபாட்டில் நேர்த்திவைத்து குளுத்தி செய்தல் மிகவும் முக்கியமானதாகும். தமது வேளாண்மை பெருகுதல் நோய்கள் இல்லாமல் வாழ்தல், ஆடுமாடுகள் பெருகுதல் என்பவற்றுக்காக நேர்த்தி வைத்து வழிபடுவர். நேர்த்திக்காகக் குளுத்திப் பாடல்கள் பாடி தமது வேண்டுதலை தெய்வத்திடமிருந்து பெறுவர் சில பிரதேசங்களில் பலியிடல் வழக்கம் இருப்பின் அதனையும் மேற்கொள்வர். கட்டாகுதல் என்னும் சடங்கு இடம் பெறும் சலவைக் காரன் குறித்த பலியிடும் ஆட்டின் மீது வெள்ளைத் துணியால் போர்த்தி எடுப்பதை இது குறிக்கும். இவ்வேளை ஆற்றுப்படுத்துவோனிடம் கலை ஆடுதலும் இடம் பெறும் சந்தர்ப்பங்களும் உண்டு.

பொங்கல் வைத்த பின், சுவாமி ஊர்வலம் இடம் பெறும் வழக்கம் உண்டு. பூசையின் போது கலை ஆடுதல், கலைமாற்றி ஆடுதல், கட்டுச்சொல்லுதல் போன்றனவும் இடம்பெறும் பிரதேசங்கள் காணப்படுகின்றன. இதன் பின்பே வழிவிடுதல் அல்லது வழி வெட்டுதல் என்னும் சடங்கு இடம்பெறும். குறித்த தெய்வத்திற்கான ஆண்டுப் பொங்கல் சிறப்பாக நடந்து விட்டது என்பதைக் குறிப்பதாக இளநீர், தேசிக்காய் என்பவற்றை ஆற்றுப்படுத்துவோரும் மற்றும் உறவுக்காரர்களும் சிறு தூரம் சென்று வெட்டியபின் ஆலயம் திரும்புவதை இப்பெயர் கொண்டு அழைப்பர். இதன் பின் ஆற்றுப்படுத்துவோர் சிறு சொற்பொழிவொன்றை நடத்தியபின் திருநீறு போடுதல், நூல் முடிதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல் போன்றவற்றை வந்திருக்கின்ற பக்தர்களுக்கு மேற் கொள்வார். இவ்வாறான, யாவும் முடிவடைந்த பின், அடுத்த வருடமே, சடங்குகள், பொங்கல், பூசை வழிபாடுகள் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பொங்கல் முடிந்து சரியாக எட்டாம் நாள், சிறு பொங்கல் இடம் பெறும். இதனை எட்டாம் மடை அல்லது வைரவர் சடங்கு என்று கூறுவர். எளிய முறையில் நடைபெறும் இப்பூசைக்கு ஒரு சிலரே சென்று வழிபடுவர். இவ்வாறாக இக் கிராமியப் பூசை முறைகள் சில பிரதேசங்களில் சிறப்பாகவும் சில பிரதேசங்களில் ஒரு சிலவற்றுடனும் நடை பெறுவதையும் நாம் காண முடியும். மேற்கூறப்பட்ட பூசை முறைகள் கிராமிய வழிபாட்டிற்குரியன.

## பாடச் சுருக்கம்

கிராமிய வழிபாட்டில் பல பூசைகள் இடம் பெறும்

இப்பூசைமுறைகள் சில பிரதேசங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டவையாகவும் சில பிரதேசங்களில் ஒழுங்குபடுத்தப்படாத முறையிலும் பின்பற்றப்படுகின்றன.

கிராமியப் பூசை முறைகள் பத்ததி, பத்தாதி என்பவற்றின் அடிப்படையில்தான் பின்பற்றப்படுகின்றன.

இப்பூசைகளை பூசாரிமார், கட்டாடிமார், கப்புகனார் போன்றோர் ஆற்றுப்படுத்துவர்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கிராமியப் பூசைகளை ஆற்றுப்படுத்துவோர் யாவர்?
2. உமது பிரதேசத்திலுள்ள ஆண் தெய்வங்கள் இரண்டையும் பெண் தெய்வங்கள் இரண்டையும் பெயரிடுக?
3. கிராமியப்பூசைகள் எவற்றின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகின்றன.
4. வழிவிடுதல் என்றால் என்ன?
5. எட்டாம் மடை என்ற சொற்பதத்தால் நீர் விளங்குவது யாது?

## செயற்பாடு

கிராமிய வழிபாட்டுப் பூசை முறைகளை பட்டியற்படுத்தி அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.